காலை வணக்கம். இன்று காலை இலங்கை தேசிய சட்ட மாநாட்டை நீங்கள் ஆரம்பித்து வைக்கும் போது சிறப்புமிக்க இச்சபையில் உரையாற்றுவதில் நான் பெருமையடைகிறேன். இந்த நாட்டில் சட்டத் தொழிலின் குரலாக விளங்கும் சட்டத்தரணிகள் சங்கமானது சட்ட உட்கட்டமைப்பில் ஒரு முக்கிய பகுதியாகக் காணப்படுகிறது. சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய இந்த இரண்டு விடயங்களும் இலங்கைக்கு மிகவும் அவசியமான தருணத்தில் அவற்றைப் பாதுகாப்பதற்கான உங்களது அர்ப்பணிப்பினை நீங்கள் வெளிப்படுத்தியிருப்பதால், சட்ட தொழில்வாண்மையாளர்கள் மற்றும் பொதுமக்களின் மரியாதை உங்களுக்கு இருக்கிறது.

பொருளாதார மற்றும் அரசியல் சவால்களை இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய சூழ்நிலையில் இந்தப் பணி மிகவும் முக்கியமானதாகும். மிகவும் ஒளிமயமான ஒரு எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதில் BASL சட்டத்தைப் பயன்படுத்தும். எனவே, இன்று உங்களுடன் இணைந்து கொள்வது ஒரு முக்கியமான கௌரவமாகும். கலிபோர்னியாவில் வளர்ந்து வரும் ஒரு இளவயது நபராக நான் கொண்டிருந்த ஒரு கனவிற்கு இது என்னை மீண்டும் கொண்டு செல்வதால் இந்தக் கூட்டத்தில் உரையாற்றுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. நான் ஒரு சட்டத்தரணியாக ஆக விரும்பினேன், சமூகத்திற்கு பாரிய நன்மைபயத்தல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கு உதவிசெய்தல் போன்ற இலக்குகளைத் தொடர்வதற்கான ஒரு தொழில் எனும் வாக்குறுதியால் நான் ஈர்க்கப்பட்டேன்.

இறுதியில், நான் ஒரு இராஜதந்திர பணியினைத் தேர்ந்தெடுத்தேன். இருப்பினும், நான் தொழில்சார் சவால்களை எதிர்கொள்ளும் போது, எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், எனது நாட்டிற்காகவும் மற்றும் உலகின் பிற பகுதிகளுக்காகவும் நான் எதை அடைந்துகொள்ள விரும்புகிறேன் என்பதை நினைவூட்டுவதற்காக அந்த முக்கிய விழுமியங்களை நான் மீண்டும் ஞாபகப்படுத்துவதுண்டு.

இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவில், சட்டத்துறையில் பொதிந்துள்ள அடிப்படை விழுமியங்கள் முன்னெப்போதையும் விட தற்போது மிகமுக்கியமானவையாக விளங்குகின்றன. இது மக்கள், பங்காண்மை மற்றும் முன்னேற்றம் தொடர்பானதாகும். உலகெங்கிலும் ஜனநாயகங்கள் அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளன. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் எந்த ஜனநாயகமும் நிலைப்பதில்லை. அந்த விலைமதிப்பற்ற ஆட்சியின் காவலர்கள் நீங்கள்.

ஆரம்பத்திலிருந்தே, எமது இரு நாடுகளுக்குமிடையிலான உறவானது ஒரு சுயாதீனமான நீதித்துறையின் முக்கியத்துவம் உட்பட்ட பகிரப்பட்ட ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததாகும். தமது கரிசனைகளுக்காக அமைதியான முறையில் குரல் கொடுப்பதற்கும் தமது அரசாங்கத்தில் பங்கேற்பதற்கும் சாதாரண இலங்கையர்களுக்குள்ள உரிமைகளுக்கான அமெரிக்காவின் ஆதரவு அசைக்க முடியாததாகும்.

சுதந்திரமான தேர்தல்கள் தொடர்பான இந்நாட்டின் பெருமைமிக்க வரலாறானது, அந்த உரிமைகளின் அடிப்படையில் அமைகிறது. சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து அரசாங்கத்திடமும் தகுதிவாய்ந்த சட்டப் பிரதிநிதித்துவம் ஊடாக ஒரு சுயாதீன நீதித்துறையிடமும் நேரடியாக வாதிடும் திறனை குடிமக்களுக்கு அவை வழங்குகின்றன. ஆகையினால்தான் நாம் கலந்துரையாடும் உள்ளூராட்சித் தேர்தல்கள் மிகவும் முக்கியமானதாக அமைகின்றன.

இந்த மாநாட்டின் போது, சட்டத்தரணிகளாக ஆவதற்கு உங்களை ஊக்குவித்த காரணிகள் தொடர்பில் சற்று கவனம் செலுத்துமாறு நான் உங்களிடம் வேண்டுகிறேன்.

சட்டக்கல்லூரிக்கு விண்ணப்பிப்பதற்கும் அந்த கடினமான பயணத்தை எதிர்கொள்வதற்கும் உங்களை வழிநடத்திய விடயம் எது? சட்டக்கல்லூரியின் முதல் நாளில் உங்கள் உணர்வுகளைப் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள், சட்டக் கல்லூரியில் தப்பிப்பிழைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய கடின உழைப்பு தொடர்பில் அறிந்து கொண்டது வெறும் ஆரம்பம் மட்டுமே. அனைத்துப் பணிகளும் வெறுமனே சம்பளத்திற்காக மட்டும் இல்லாமல் ஒரு உயர்ந்த நோக்கத்திற்கானதாகவும் இருக்க வேண்டும்.

கடந்த வருட போராட்டங்களின் போது, 300இற்கும் மேற்பட்ட உங்களின் உறுப்பினர்கள் அந்த தருணத்தை சந்தித்ததுடன் சட்டத்தின் ஆட்சி மற்றும் முறையான படிமுறை பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காக கைது செய்யப்பட்ட மக்கள் சார்பாக அவர்கள் ஆஜராகினர். அதே நேரத்தில், வன்முறையில் ஈடுபடுபவர்கள் அல்லது பொதுச் சொத்துக்களை அழிப்பவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படமாட்டாது என்பதை தெளிவுபடுத்தியதன் மூலமாக ஒழுக்கமான நடத்தையினையும் நீங்கள் ஊக்குவித்தீர்கள். உங்களது செயல்கள் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கான ஒரு அற்புதமான செயல்ரீதியான வெளிப்பாடாக இருந்தன.

இந்த நிகழ்வுகள் ஆச்சரியமானவையாகவும் முக்கியமானவையாகவும் இருந்தபோதும், அவை உங்களது முழு சங்கமும் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தினது அகலத்தையும் ஆழத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. நீங்கள் குற்றவியல் வழக்கறிஞராக பணியாற்றினாலும் சிவில் வழக்கறிஞராக பணியாற்றினாலும் இலங்கை சமூகமும் பொருளாதாரமும் திறம்பட செயற்படுவதற்கு உங்களது பணி இன்றியமையாததாகும். உங்களது அன்றாடப் பணி தலைப்புச் செய்திகளில் இடம்பெறாமல் இருக்கலாம், ஆனால் அது இலங்கை ஜனநாயகத்திற்கு வழங்கும் உறுதியான அடித்தளத்திற்காக அமெரிக்கா மற்றும் ஏனைய பலரின் ஆதரவைப் பெறுகிறது.

அந்த அர்ப்பணிப்பை நான் அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நீதித்துறைக்கான அமெரிக்க உதவியானது கடந்த பல ஆண்டுகளாக, சட்ட உதவிகளை வழங்குவதற்கும், முக்கியமான சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், நீதித்துறை தாபனங்கள் மற்றும் அதில் செயற்படுவோரின் செயற்திறனை வலுப்படுத்துவதற்கும் உதவியுள்ளது.

இன்றைய இணை அனுசரணையாளரான சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு மற்றும் அமெரிக்க நீதி மற்றும் வர்த்தக திணைக்களங்கள் ஆகியவற்றின் ஊடாக இலங்கை நீதித்துறையில் அமெரிக்கா கொண்டுள்ள பங்காண்மையின் விசாலமானது, இந்தப் பணிக்கு வழங்கப்படும் முன்னுரிமையினையும் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியினை முன்னெடுப்பதற்கான இலங்கையின் முயற்சிகள் மீது நாம் கொண்டுள்ள மரியாதையினையும் பிரதிபலிக்கிறது.

உதாரணமாக, USAID இன் வினைத்திறனான மற்றும் செயல்விளைவுள்ள நீதி எனும் நிகழ்ச்சித்திட்டமானது நிர்வாக வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் நீதித்துறைப் பணியாளர்களின் திறனை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் இலங்கையின் நீதித்துறையை பலப்படுத்துகிறது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உட்பட நீதித்துறை நிறுவனங்களுடன் இணைந்து USAID ஆனது மாற்றுத் தகராறு தீர்வு, குடிவரவு, காணிச் சட்டங்கள், சட்ட ஆராய்ச்சி,

பாலின சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கம் மற்றும் தொழில்வாண்மை நெறிமுறைகள் போன்ற தலைப்புகளில் சட்டக் கல்வியைத் தொடரும் வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

சிறந்த நடைமுறைகள் மற்றும் வழக்கு முகாமைத்துவத்திற்கான கருவிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக USAIDஆனது இலங்கையின் அரை மில்லியனுக்கும் அதிகமாக நிலுவையில் தேங்கியிருக்கும் வழக்குகளை விசாரித்து முடிப்பதற்கு உதவுகிறது. அதற்கு மேலதிகமாக, கொழும்பிலுள்ள அமெரிக்க நீதித்திணைக்களத்தின் அனுபவம் வாய்ந்த வழக்குத்தொடுநர் ஒருவர், இலங்கையின் நீதி அமைப்பை மேம்படுத்த உதவுவதற்காக உங்களுடனும் மற்றும் பிற வழக்கறிஞர்களுடனும் இணைந்து பணியாற்றுகிறார்.

பணியகவாட்சி நடைமுறைகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, அனைவருக்கும் நீதி வழங்குவதில் கவனம் செலுத்தக்கூடிய இயலுமையினை வழங்கும் வகையில் நீதிமன்ற நடவடிக்கைகளை நவீனமயமாக்குவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கும் அமெரிக்கா உதவி செய்தது.

அனைவருக்கும் என்றால், அனைவருக்கும்தான்!

அனைவரையும் உள்ளடக்குதல் என்பது அமெரிக்க அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக இருப்பதுடன் சட்டத் தொழிலின் ஒரு முக்கியமான கொள்கையாகவும் அது இருக்கிறது. சட்டத் தொழிலானது நியாயமான, பொறுப்புக்கூறக்கூடிய மற்றும் சமத்துவமான சேவையினை வழங்குதல் எனும் அத்திவாரத்தில் அமைந்துள்ளது. உங்களது பிரதிநிதித்துவத்திலும் உங்களது அணுகுமுறையிலும் அனைவரையும் உள்ளடக்குதல் எனும் விடயத்தில் குடிமக்கள் உங்களை நம்பியிருக்கிறார்கள்.

அமெரிக்காவில், எங்களுக்குரிய போராட்டங்களை நாங்கள் கொண்டிருந்தபோதும், இந்த அடிப்படைக் கொள்கைகளின்படி வாழ்வதற்காக நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளிலிருந்து பல விடயங்களை நாங்கள் கற்றுக்கொண்டோம்.

ஒருநூற்றாண்டிற்கும் குறைவான காலத்திற்கு முன்பு, ஆபிரிக்க அமெரிக்கர்கள் அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கத்தில் இணைவதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தனர். 1918 ஆம் ஆண்டு வரை அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கத்தில் இணைவதற்கு பெண்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை, அதற்குப் பின்னரான பல தசாப்தங்களுக்கு வழக்கறிஞராகப் பணிபுரியும் பெண்கள் ஒரு சிறிய எண்ணிக்கையில் மட்டுமே உருவாகினர். தற்போது அமெரிக்காவில் வழக்கறிஞராகப் பணிபுரிவோரில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் பெண்களாக உள்ளனர். இன மற்றும் பாலின அடிப்படையிலான பிரதிநிதித்துவ இடைவெளிகளை நிரப்புவதற்காக ஆற்றவேண்டிய பணிகள் இன்னும் அதிகம் உள்ளன. இருப்பினும், சட்டப்பணி செய்வதில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் எமது பன்முகத்தன்மையானது அனைவருக்கும் நீதியை வழங்கி எமது ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது என்பதை நாங்கள் கற்றுக்கொண்டோம்.

இலங்கையில் சட்டத் தொழிலின் தலைவர்கள் என்ற வகையில், வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது – அதை நீங்கள் செய்கிறீர்கள்! 2022ஆம் ஆண்டில் இந்த சட்டத்தரணிகள் சங்கத்தில் அனுமதிக்கப்பட்ட 1,081 வழக்கறிஞர்களில் 64 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்களாவர் எனும் ஒரு அற்புதமான புள்ளிவிவரத்தை அன்றொருநாள் நான் செவியுற்றேன்.

எனவே, சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதற்கான உங்களது அர்ப்பணிப்பு, கல்வியைத் தொடர்வதற்கான உங்களது விருப்பம், மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கான உங்களது விருப்பம் மற்றும் பொதுமக்களின் கரிசனைகளுக்காகக் குரல் கொடுப்பதற்கான உங்களது தைரியம் ஆகியவற்றிற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். இத்தலைமைப் பண்புகள் சட்டத் தொழிலில் பன்முகத்தன்மை, மறுசீரமைப்பு மற்றும் சுறுசுறுப்பு ஆகியவற்றை மேம்படுத்த உதவும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

நீங்கள் சட்டத் தொழிலின் எதிர்காலத்தை வடிவமைக்கும்போது சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் தொழில்வாண்மை அபிவிருத்தியினை மேற்கொள்ளல் ஆகியவற்றைத் தொடரவும், நீதிக்கான சமமான அணுகலைத் தொடர்ந்து வழங்கவும் நான் உங்களை ஊக்குவிக்கிறேன். எனது தொழிற்பாதையினைத் தேர்ந்தெடுக்கும்போது நீண்ட காலத்திற்கு முன்பு நான் கனவு கண்ட பொதுமக்களுக்கு சேவையாற்றும் அந்த உணர்வை நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள்.

அனைவருக்கும் நீதி கிடைக்கும் நாடாக இலங்கையை முன்னோக்கி வழிநடத்தும் பாதையில் உறுதியாக நின்று முன்னேறிச் செல்லுமாறு உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக, இன்று உரையாற்றுவதற்காக என்னை அழைத்தமைக்காகவும், நீதித்துறை சீர்திருத்தங்களின் முன்னணியில் நீங்கள் வழங்கும் தலைமைத்துவத்திற்காகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு மீண்டுமொருமுறை நான் நன்றி கூற விரும்புகிறேன். மாத இறுதியில் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்யவுள்ள சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் அவர்களையும் நான் பாரட்ட விரும்புகிறேன். சட்டத்தின் ஆட்சிக்காக அவர் உறுதியாக, தைரியமாக மற்றும் வெளிப்படையாகக் குரல்கொடுத்த ஒரு வீரராக இருந்ததை நாம் அனைவரும் அறிவோம். நன்றி, சாலிய.

நீதித்துறையை பலப்படுத்துவதற்கும் நவீனமயப்படுத்துவதற்குமான அர்ப்பணிப்பிற்காக நீதி அமைச்சு மற்றும் பிற நீதித்துறை நிறுவனங்களுக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன். இலங்கை நீதி அமைப்பின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்காக உங்களுடன் ஒன்றிணைவது ஒரு கௌரவமாகும்.

உங்களது நோக்கம் என்னவென்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள், இந்தக் காலகட்டத்தில் நீங்கள் ஆற்றவேண்டிய பங்கு என்னவென்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த அறையினை நீங்கள் நோட்டமிட்டால் உங்களிடையே உள்ள கதாநாயகர்களைப் பார்க்கலாம் என நான் நம்புகிறேன். Wonder Woman உட்பட Justice League கதாநாயகர்களைப் பற்றிய நிறைய திரைப்படங்களை நானும் என் மகனும் பார்ப்போம், அதிலிருந்து ஒரு உடை ஊசியினை (brooch) இன்று நான் அணிந்திருக்கிறேன். “உங்களால் தனியே இவ்வுலகைக் காப்பாற்ற முடியாது.” என்பது அவர்களின் குறிக்கோள் வாசகங்களில் ஒன்றாகும். நீதித்துறையினதும் சட்டத்தின் ஆட்சியினதும் சுதந்திரம் மற்றும் ஒருமைப்பாட்டிற்கான விடாமுயற்சியில் நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிறைய விடயங்களைச் செய்யலாம். நன்றி.